# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:15 வள்ளுவர்ஆண்டு 2030 மார்கழி 1 வியாழக்கிழமை (16-12-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்:17


# வடக்கில் தேர்தலைக் குழப்புவதே புலிகளின் தாக்குதலின் நோக்கம்!

## ஜெனரல் பலகல்ல கூறுகின்றார்

கொழும்பு, டிசெம்பர் 16

"விடுதலைப் புலிகள் தற்சமயம் ஆரம்பித்துள்ள தாக்குதல் யாழ்ப் பாணத்துக்குத் தரைவழித் தொடர்பு ஒன்றை ஏற்படுத்தித் தேர்தலைக் குழப்புவதற்கே என நம்புகிறேன்."

இராணுவ சிரேஷ்ட நிர்வாக அதிகாரி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கொழும்புச் செய்தி வட்டாரத்துக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இப்படிக் கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகள் தற்சமயம் ஆரம்பித்துள்ள தாக்குதல் ஆனையிறவு முகாமை இலக்குவைத்ததாக இல்லை. ஆனையிறவுக்குக் கிழக்கே பாதை ஒன்றை ஏற்படுத்தி, அதன் மூலம் கணிசமான இடத்தைப் பிடித்து பின்னர் ஆனையிறவைச் சுற்றிவளைப்புக்குள் கொண்டுவரும் நோக்கமாகவும் இருக்கலாம்

தற்சமயம் புலிகளின் தாக்குதல் ஓய்ந்துள்ளது ஆனால் அந்தத் தாக்குதல் இன்னமும் முடியவில்லை. பெரும் தாக்குதலுக்கு அவர்கள் திட்டமிட்டுள்ளதை ஊகிக்க முடிகிறது.

முதலில் அவர்களின் இலக்கு யாழ்ப்பாணத்தில் தேர்தல் நடத்துவதைக் குழப்புவதாக இருக்கும் என நினைக்கிறேன் — என்றார்.

(உ-3)

## யாழ். ஆஸ்பத்திரியின் நிலை குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம், டிசெ. 16

யாழ். ஆஸ்பத்திரியின் பாதுகாப்பு நிலை வரம் தொடர்பாக ஆஸ்பத்திரி நிர்வாகமும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகளும் நேற்றுக் கலந்துரையாடினர்.

ஆஸ்பத்திரியில் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் முன்னர் நடைமுறையில் இருந்த பாதுகாப்பு வலயத் திட்டம் தொடர்பாக நேற்றைய கலந்துரையாடலில் ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தைஉடனடியாக நடைமுறைப்படுத்துவதில் பல சிக்கல் உள்ளதாக கூட்டத்தில் சுட்டிக்காட்டப் பட்டது,

இதன் காரணமாக செஞ்சி

[8 ஆம் பக்கம் பார்க்க]

## தாழையடியில் 1300 பேர் சிக்குண்ட நிலைமையில்?

வடமராட்சி, டிசெ 16

வடமராட்சி கிழக்கில் தாழையடி சென். அன்ரனீஸ் தேவாலயம், மருதங்கேணி கிராமிய வைத்தியசாலை ஆகியவற்றில் தங்கியுள்ள 359 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து முந்நூறு அகதிகள் அங்கிருந்து வெளியேற முடியாத நிலையில் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

தற்போதைய யுத்த சூழ்நிலை காரணமாக வத்திராயன் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த இவர்கள் பாதுகாப்புக் கருதிச் செம்பியன் பற்று, மாமுனைப் பகுதிகளுக்குச் செல்ல விரும்பினர் என்றும் —

ஆனால் அவர்கள் அங்கு செல்ல அனுமதிக்கப்படாது

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மருதங்கேணிப் பகுதியில் 4 பேர் ஷெல்லினால் காயம்

வடமராட்சி, டிசெ. 16

மருதங்கேணிப் பகுதியில் கடந்த திங்கள் முதல் வீழ்ந்து வெடித்த ஷெல்களினால் நால்வர் காயமடைந்துள்ளதாக தற்போது தகவல் வெளியாகியுள்ளன.

மருதங்கேணியில் வீடு ஒன்றில் வீழ்ந்த ஷெல்லால் தங்கரதீசன் (வயது 16 — உடுத்துறை ம வி. மாணவன்), க. மயில்வாகனம் (வயது 40) ஆகியோரும்.

தாழையடி அந்தோனியார் ஆலயத்துக்கு அருகில் வீழ்ந்த ஷெல்லால் செல்வகுலேந்திரன் கஜேந்தினி [வயது 17— உடுத்துறை ம. வி. மாணவி], சி. புனிதன் [வயது 25] ஆகியோரும்—

காயமடைந்த நிலையில் மருதங்கேணி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(உ-3-7-109-173)

## பொன்னாலை ஆலயத்துக்கு பக்தர் செல்ல அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம், டிசெ.16

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் தற்சமயம் நடைபெறும் வருடாந்த உற்சவத்தில் பக்தர்கள் பங்கு பற்றுவதற்கு நேற்று முன்தினம் தொடக்கம் அனுமதி வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 11ஆம் திகதி ஆரம்பமான இந்த ஆலய உற்சவத்தில் பங்குபற்றும் பக்தர்கள் வழமையாகத் தமது அடையாள அட்டைகளைப் பொன்னாலை சோதனை நிலையத்தில் கையளித்துச் செல்வது வழக்கம்.

[8 ஆம் பக்கம் பார்க்க]

## பள்ளிமுனைக் கடலில் 3 சடலங்கள் ஒதுங்கின

### இரண்டின் தலைகள் சிதறிய நிலையில்!

மன்னார், டிசெ. 16

மன்னார் பள்ளிமுனைக் கடற்கரையில் தலைகள் சிதறிய நிலையில் இரு சடலங்கள் உட்பட மூன்று சடலங்கள் நேற்று மாலை கரை ஒதுங்கின.

22க்கும் 33க்கும் இடைப்பட்ட வயதுடைய ஆண்களின் சடலங்களே அவை எனத் தெரிவிக்கப்பட்டது.

மன்னார் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள சடலங்களை மன்னார் நீதிவான் எம். இளஞ்செழியன் பார்வையிட்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

(உ-3)

## வெற்றிலைக்கேணித் தாக்குதலில் கடற்புலிகளே பெருமளவில் பங்கு!

கொழும்பு, டிசெ. 16

"வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, புல்லாவெளி ஆகிய இடங்களில் புலிகள் மேற்கொண்ட தாக்குதல் புதிய பாணியில் அமைந்திருந்தது. கடற் புலிகளே இந்தத் தாக்குதலில் பெரும் பங்கு வகித்துள்ளனர்." — என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுனில் தென்னக்கோன் தெரிவித்தார்.

இராணுவ தலைமையகத்தில் நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

ஆனையிறவுக்கு மேற்குப் பக்கமாகவும் தெற்குப் பக்கமாகவும் கடந்த 11 ஆம் திகதி முதல் விடுதலைப் புலிகள் 10க்கு மேற்பட்ட தடவைகள் தாக்கினர்.

இந்தத் தாக்குதலில் கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி, புல்லாவெளி ஆகிய இடங்களில் இருந்த சிறு முகாம்களைத்தான் புலிகள் கைப்பற்றினர். அந்தப் பிரதேசத்தில் தொடர்ந்தும் எமது பாதுகாப்பு அரண்கள் உள்ளன

முன்பு இருந்த இடத்தில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கிரனேட் வீச்சு

வவுனியா, டிசெ 16

காவல் கடமையில் ஈடுபட்டிருந்த படையினருக்குத் தேநீர் வழங்கச் சென்ற பொலீஸ் வாகனம் மீது கைக்குண்டு வீசப்பட்ட சம்பவம் ஒன்று நேற்றுமுன்தினம் இரவு வவுனியா — பண்டாரிக்குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இழப்புக்கள் ஏதும் இடம் பெற்றதாகத் தெரியவில்லை.

[உ-7-164]

## சாவகச்சேரியில் ஓரளவுக்கு வழமைநிலை

தென்மராட்சி, டிசெ. 16

சாவகச்சேரி நகரப்பகுதியின் செயற்பாடுகள் நேற்றைய தினம் ஓரளவு வழமைக்குத்திரும்பியதாகத்தெரிவிக்கப்படுகிறது.

அரச திணைக்களங்கள் மற்றும் வங்கிகள் திறந்திருந்தன. வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டிருந்ததோடு மக்கள் நடமாட்டமும் ஓரளவு காணப்பட்டது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரி வளவிலும் ஷெல் வீழ்ந்தது!

தென்மராட்சி, டிசெ 16

சாவகச்சேரி நகரிலும் வைத்தியசாலை மார் நோய்ச் சிகிச்சைப் பிரிவுக்கு அருகிலும் நேற்று அதிகாலை 2 மணியளவில் ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன.

தொடர்ச்சியாக வீழ்ந்து வெடித்த ஷெல்களினால்பதற்றம் நிலவியது. மக்கள் பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் அடைந்ததால் பாதிப்பு ஏதும் ஏற்படவில்லை.

இந்த ஷெல் வெடிப்பால் வைத்தியசாலைக் கட்டடங்களுக்கு சிறுசேதம்ஏற்பட்டது.

அதேநேரம்—நேற்று முன்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கள்ள வாக்குப் போடும் வாய்ப்பு வடக்கில் அதிகம்!

### அதிகாரிகளிடம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.16

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைத் தவிர ஏனைய வேட்பாளர்களுக்கு யாழ். குடாவில் வாக்களிப்பு நிலைய முகவர்கள் நியமிக்கப்படாமையினால் கள்ள வாக்குகள் போடும் நடவடிக்கைகள் இடம்பெறலாம் என்று தேர்தல் வன்செயல்களைக்கண்காணிப்பதற்கான நிலையத்தைச் சேர்ந்த அதிகாரிகளிடம் சுட்டிக் காட்டப்பட்டது.

யாழ். பஸ்ரியன் ஹோட்டலில் நேற்று முன்தினம் யாழ். சட்டத்தரணிகள் சங்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டர் ஆசிரியர்கள் திருமலையில் மறியல்!

திருகோணமலை, டிசெ. 16

வடக்கு — கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளரை அவரது அலுவலகத்தில் தடுத்து வைத்துத் திருகோணமலை மாவட்டத் தொண்டர் ஆசிரியர்கள் மறியல் போராட்டம் ஒன்றை நேற்று நடத்தினர்.

திருகோணமலை, கிண்ணியா ஆகிய பகுதிகளில் பணிபுரியும் தொண்டர் ஆசிரியர்கள் தமக்கு நிரந்தர நிய

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# குறோஸ்னிக்குள் ரஷ்யப் படைகள்!

## உக்கிர சண்டை நீடிப்பு

மொஸ்கோ. டிசெ. 16

செச்சினியாவில் கடந்த மூன்று மாதங்களாக தொடர்ந்து தாக்குதல் நடத்திவரும் ரஷ்யப் படையினர் தலைநகர் குறோஸ்னிக்குள் நுழைந்து விட்டதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

குறோஸ்னிக்கு தென்கிழக்கே 20 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள ஷாலி என்ற நகரத்தைக் கைப்பற்றியதை அடுத்து ரஷ்யப் படையினர் குறோஸ்னிக்குள் நுழைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

எனினும் தலைநகரின் எல்லையிலேயே சண்டைகள் நடைபெற்றுவருவதாகத் தீவிரவாதிகள் தெரிவித்துள்ளனர். செச்சினியாவில் தற்போது தீவிரவாதிகள் வசம் இருக்கும் ஒரேயொரு நகரம் குறோஸ்னி மட்டுமே.

அதனைக் கைபற்றுவதற்கு ரஷ்யப் படையினர் அதிக விலை கொடுக்க வேண்டி இருக்கும் என்று இராணுவ ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

குறோஸ்னிக்குள் ரஷ்யப் படைகள் நுழைந்துள்ளன என்ற செய்தியை அடுத்து அங்கு தங்கி உளள சுமார் 40 ஆயிரம் மக்கள் பற்றி தொண்டர் நிறுவனங்கள் கவலை வெளியிட்டுள்ளன. தலைநகரில் இருந்து பொதுமக்கள் வெளியேறுவதற்கு ரஷ்யப் படையினர் கடந்த ஞாயிறு இரவு வரை காலக்கெடு வழங்கி இருந்தனர். இந்தக் காலக் கெடுவுக்குள் ஒரு சில ஆயிரம் மக்களே அங்கிருந்து வெளியேறியதாகத் தெரிவிக்கப்பட்டது.

தலைநகரில் சிக்கி உள்ள பொதுமக்களின் பாதுகாப்புத் தொடர்பாக செச்சின் அதிபர் மாஸ்காடோவுடன் பேச்சு நடத்த உள்ளதாக ரஷ்யா தெரிவித்துள்ளது. இது தொடர்பாக ரஷ்யாவுடன் பேசத் தயாராக இருப்பதாக மாஸ்காடோ தெரிவித்தார். (ஐ-6-8)

### சிரியாவுடன் இணக்கம் காணப்படவுள்ள

# புதிய உடன்பாடு தொடர்பாக இஸ்ரேலில் கருத்துக்கணிப்பு

ஜெருசலேம், டிசெ. 16

இஸ்ரேல் — சிரியா சமாதான ஒப்பந்தத்தில் இணக்கம் காணப்பட உள்ள விடயங்கள் குறித்து நாட்டில் பொதுக் கருத்துக் கணிப்பு ஒன்று நடத்தப்பட உள்ளதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது.

பொதுக் கருத்துக் கணிப்பு நடத்துவதற்கு முன்னர் சமாதான ஒப்பந்தம் குறித்து இஸ்ரேல் நாடாளுமன்றின் அனுமதியைப் பெறுவது என்று நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவுசெய்யப் பட்டது.

இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் உரையாற்றிய இஸ்ரேலியப் பிரதமர் எகுட் பராக், புதிய சமாதான உடன்படிக்கை கோலன்குன்றுப் பகுதியில் உள்ள இஸ்ரேலியர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடும் என்பதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றார்.

1967 ஆம் ஆண்டு இஸ்ரேல்—சிரியா போரின் போது கோலன்குன்றுப் பகுதி இஸ்ரேலியப் படைகளால் கைப்பற்றப்பட்டது. பின்னர் அங்கு இஸ்ரேலிய குடியிருப்புகள் ஏற்படுத்தப்பட்டன.

இந்தப் பகுதி முற்று முழுதாக சிரியாவிடம் ஒப்படைக்கப்படும் என்ற உறுதி மொழி எதனையும் இஸ்ரேல் சிரியாவுக்கு வழங்கவில்லை என்று எகுட் பராக் கூறினார். எனினும் கோலன்குன்றுப் பகுதி முழுவதும் மீண்டும் சிரியாவிடம் ஒப்படைக்கப்படும் என்று இஸ்ரேலிய முன்னாள் பிரதமர்கள் ஜிட்சாக் ரபின் மற்றும் ஷிமோன் பெரஸ் ஆகியோர் தமக்கு உறுதி அளித்திருந்தனர் என்று அந்த நாடு தெரிவித்துள்ளது.

அமைதிப்பேச்சுக்கள் இன்று வாஷிங்டனில் ஆரம்பமாகின்றன. இஸ்ரேலியப் பிரதமர் தலைமையிலான குழுவும் சிரிய வெளியுறவுத் துறை அமைச்சர் தலைமையிலான குழுவும் இந்தப் பேச்சுக்களில் கலந்து கொள்ள உள்ளனர்.

கோலன் குன்று தொடர்பாக இரு தரப்புக்கும் இடையில் இணக்கம் ஏற்படவில்லை எனின் இந்தப் பேச்சுக்கள் வெற்றி அளிக்காது என்று அவதானிகள் தெரிவித்துள்ளனர். (ஐ-6-9)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## கேள்விப்பத்திர அறிவித்தல்

### தளபாடங்கள் வழங்கல்

யாழ். பல்கலைக்கழகத்துக்குப் பின்வரும் தளபாடங்களைச் செய்து வழங்குவதற்குத் தகுதி வாய்ந்தவர்களிடம் இருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 01. | உயரதிகாரிகள் கதிரை | — 47 |
| 02. | கைக் கதிரை | — 462 |
| 03. | காரியாலய மேசை | — 12 |
| 04. | தட்டெழுத்தாளர் மேசை | — 04 |
| 05. | வாசிப்பு மேசை | — 50 |
| 06. | பருவ இதழ் வாசிப்பு மேசை | — 02 |
| 07. | கண்ணாடி முகப்பிலான அலுமாரி | — 08 |
| 08 | விரிவுரை மண்டபக் கதிரை | — 600 |
| 09. | ஆய்வுகூட ராக்கை | — 05 |
| 10. | ஆய்வுகூட வேலை மேசை | — 16 |
| 11. | மரத்தினாலான அலுமாரி | — 03 |
| 12. | மாநாட்டு மேசை | — 01 |
| 13. | மாநாட்டு மேசைக் கதிரை | — 35 |
| 14. | பக்கராக்கை | — 04 |
| 15. | கண்ணாடி முகப்பிலான அலுமாரி | — 03 |
| 16. | உயரதிகாரிகள் மேசை | — 05 |
| 17. | கட்டில் | — 26 |
| 18. | கற்கை மேசை | — 10 |
| 19. | வாசிப்பு மேசைக் கதிரை | — 26 |
| 20. | மரத்தினாலான அலுமாரி | — 27 |
| 21. | தட்டெழுத்தாளர் ஸ்ரூல் | — 04 |

1. கேள்விப்பத்திரதாரர் மீளளிக்கத் தகாத வைப்புப் பணமாக ரூபா 500/- மீளளிக்கும் வைப்புப் பணமாக 5000/ - ரூபாவும் நிதிக்கிளையில் காசாகச் செலுத்தி, அதற்கான பற்றுச் சீட்டுடன் நிதியாளருடன் தொடர்பு கொண்டு, கேள்விப் பத்திர ஆவணங்களை அலுவலக நேரத்தில் 21 - 12 - 99 ஆம் திகதி தொடக்கம் 10 – 01 – 2000 ஆம் திகதி வரை பெற்றுக் கொள்ளலாம்.
2. பூர்த்தியாக்கப்பட்ட கேள்விப் பத்திரங்கள், நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம், திருநெல்வேலி என முகவரியிடப்பட்டு 14 - 01 – 2000 பிற்பகல் 2.00 மணிக்கு முன்பதாக, பதிவுத் தபால் மூலமாகவோ அன்றி நேரடியாகவோ சமர்ப்பிக்கலாம்.
3. கேள்விப் பத்திரங்கள் அன்றைய தினம் பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக சபை அறையில் திறக்கப்படும். கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்.

பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.

(சி/10216)



லிபேட்டி அச்சுவேலி
இன்று மட்டும்
விஜயசாந்தியின்
கில்லாடி மருமகள்
நாளை முதல்
நீஎனக்கு உயிரம்மா
காட்சிகள்: 10-30, 2-30
T.P.No.070-212223
070 - 212678
(71687)



ராஜா
யாழ்ப்பாணம்
விஜய் - ஷாலினி
மற்றும் பலர் நடித்த
காதலுக்கு மரியாதை
10-30, 2-30,
(சி/10120)



நாகம்ஸ்
சுன்னாகம்
ரஜனி, ரோஜா
நடித்த
உழைப்பாளி
11-00, 2-30,
(புதிய நேரம்)
(71727)



நயினாதீவு
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்

## விசேட அறிவித்தல்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயிலில்
எதிர்வரும் 26-12-1999 தொடக்கம்
1-01-2000 வரையுள்ள

காலத்தில் நடத்துவதற்கு ஏற்பாடாகியிருந்த மஹாயாகம் எதிர்பாராத காரணங்களால் பின்போடப்பட்டுள்ளது என்பதனை மிகவும் விநயத்துடன் அறியத்தருகிறேன். பின்போடப்பட்டுள்ள மஹாயாகம் எப்பொழுது நடைபெறும் என்பது பற்றிய அறிவித்தல் விரைவில் வெளியிடப்படும்.

செயலாளர்,
அறங்காவலர் சபை,
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்
நயினாதீவு

நயினாதீவு 15-12-1999. (71811)



தென்மராட்சி மேற்கு
பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் (கைதடி).

## முக்கிய அறிவித்தல்

மேற்படி சங்க எல்லைக்குள் ஏற்பட்டிருக்கும் பதற்ற நிலை காரணமாக 18—12—99 இல் நடைபெறவிருந்த வருடாந்த பொதுக் கூட்டம் மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பின்னர் அறிவிக்கப்படும் திகதியில் தற்போது உள்ள நிகழ்ச்சியுடன் வருடாந்த பொதுக் கூட்டம் நடைபெறும் என்பதை சகல அங்கத்தவர்களுக்கும் அறியத்தருகின்றேன்.

சி. சுப்பிரமணியம்
தலைவர்
தெ. மே. ப. நோ. கூ. சங்கம்.

16 – 12 – 99 (சி/10215)



## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலக
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
திரு. ந. நிமலன் அவர்களின்
அன்புத்தாயார்

திருமதி நவரத்தினம் இந்திராணி

அவர்களின் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை அன்னாரின் குடும்பத்திற்குத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,
பிரதேச செயலகம்,
சங்கானை.

(சி/10214)



## கண்ணீர் அஞ்சலி

எமது செயலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
திரு ந. நிமலன்
அவர்களின் அன்புத் தாயார்

இந்திராணி நவரத்தினம்

அவர்களின் மரணச் செய்தியை அறிந்து மிகுந்த வேதனை அடைவதோடு அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பிரதேச செயலாளரும்,
பிரதேச செயலக நலன்புரிச் சங்கத் தலைவரும்,
உறுப்பினர்களும்.

பிரதேச செயலகம்,
வலிகாமம் மேற்கு,
சங்கானை.

(சி/10213)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## மக்கள் நலனைப் பேணுக

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மீண்டும் போர்ச் சூழ்நிலை உருவாகி உள்ளது. அதனால் எப்போது என்ன நடைபெறும் என்று தெரியாத பதற்ற நிலையில் மக்கள் காணப்படுகின்றனர். மாவட்டத்தின் சில பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இடம்பெயர நேரிட்டுள்ளது.

போர் எனும் போது அதில் ஈடுபடும் இருசாரார்களை விடவும் பொதுமக்களே அதிகம் பாதிக்கப்படுவது — பலவகைகளிலும் பாதிக்கப்படுவது — இப்போது வழமையாகி வருகிறது. போர் முறைகளில் உலகளாவிய ரீதியில் மாற்றங்கள் உண்டாகி வருவதால் மக்கள் அதிகளவில் பாதிக்கப்படுவதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றார்கள்

எனினும் தமது இராணுவ நடவடிக்கைகளால் பொதுமக்கள் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்வது இரண்டு தரப்புகளினதும் பொறுப்பும் கடமையுமாகும். இதனைச் சர்வதேச போர் நியமங்கள் வலியுறுத்துகின்றன.

முன்னறிவித்தல் எதுவும் கொடுக்காமல் குடியிருப்புப் பிரதேசங்கள் மீது தாக்குதல் நடத்துவது எவ்வாறு தவறோ அதே போன்று தாம் விரும்பிய இடங்களுக்குச் சென்று தமது உயிர்களைக் காப்பாற்றும் மக்களின் அடிப்படை உரிமையை மறுப்பதும் தவறாகும் முன்னறிவித்தல் கொடுத்துத்தாக்குதல் நடத்துவது கூட நியாயப்படுத்த முடியாதுஎன்ற வாதமும் உண்டு.

இரண்டு தரப்புகளும் மக்களின் பாதுகாப்புக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும் என்று விநயமாகக் கேட்டுக் கொள்கின்றோம். குடாநாட்டு மக்கள் ஏற்கனவே போரினால் பல இழப்புகளையும் இன்னல்களையும் அனுபவித்தவர்கள் அதனை மனதிற் கொண்டு அவர்கள் பாதிப்புறாமல் பார்த்துக் கொள்வது அவசியம்.

இடம்பெயர்ந்து செல்லும் மக்களின் அடிப்படைத் தேவைகளைக் கவனிக்க உரியவர்கள் உடன் ஆவன செய்யவேண்டும். போருக்கு முடிவு வந்தால் தான் இத்தகைய அவலங்களில் இருந்து மீளலாம் என்ற விரக்தி நிலையில் உள்ள மக்களுக்கு இது போன்ற வேளைகளில் உதவி செய்ய எல்லோரும் முன்வர வேண்டும்.

அரசாங்கமும் தொண்டர் நிறுவனங்களும் உதவும் என்று மனதில் திருப்தி கொள்ளாமல் சமூக அமைப்புகளும் இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவ வேண்டும். பொது இடங்களில் தங்குவோருக்கு எல்லோரும் இயன்ற வரை உதவ வேண்டும். உறவினர் வீடுகளில் தங்குவோரில் பலரும் பாதுகாப்புக் கருதி அங்கு சென்றிருக்கக் கூடும். அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு அவர்களுக்கும் உதவ முன்வர வேண்டும்.

இந்த இடம்பெயர்வுகளுக்கும் ஏனைய அவலங்களுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டுமானால், தமிழர்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று அவசியம். ஆனால் அந்த வழியில் போதிய நாட்டம் காட்டப்படவில்லை.

போர், நாடு முழுவதற்குமே பேரழிவைத் தருகிறது என்பதனை உணர்ந்தாவது, சமாதான வழியில் அதனை நிறுத்த எல்லாத் தரப்புகளும் அக்கறை கொள்வது எப்போது? காலம் பிந்தப் பிந்த, அழிவு பெருகுமே அன்றிக் குறையாது.

# குடாநாட்டைச் சோலைவனமாக்க

# மரம் நடுகைக்கு ஏற்றகாலம் இது

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடந்த சில வருடங்களாகப் பயன் தரும் மரங்களும் காட்டு மரங்களும் அழிக்கப்பட்டு வருவதனால் மரங்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்து கொண்டே வருகின்றன.

கடந்த காலங்களில் வன்னிப் பெருநிலப் பரப்பிலிருந்து குடாநாட்டின் விறகுத் தேவைக்கென மரங்கள் எடுத்துவரப்பட்டன. ஆனால் அண்மைக்காலயுத்தநிலைமைகளினால் அவை எடுத்து வரப்படுவது தடைப்பட்டுள்ளமையால் குடாநாட்டின் விறகுத் தேவைக்காகவும் மற்றைய தேவைக்காகவும் மரங்கள் பெருமளவு அழிக்கப்பட்டு வருகிறது. அதனால் சிறிது காலத்தின் பின்பு மரங்கள் அரிதாகவே காணப்படும் சூழ்நிலை தோன்றவுள்ளது.

எனவே மக்களாகிய நாம் அவற்றின் பயனையும் எதிர்காலச் சந்ததியின் தேவைகளையும் கருத்திற் கொண்டு மரங்களைப் பேணி வளர்ப்பது இன்றியமையாத ஒன்றாகும். எமது மூதாதையர்கள் உருவாக்கிய மரங்களினால் நாம் இன்று பயனடைவது போல நமது எதிர்காலச் சந்ததியும் மரங்களால் பயன்பெற வேண்டாமா? விறகுத் தேவைக்கு மட்டுமன்றித்தளபாடங்கள் செய்வதற்கும் ஏன் நிழலைத் தருவதற்கும் மரங்கள் பெரிதும் பயன்படுகின்றன எனவே நாம் எமது வீட்டிலும் மற்றும் காணிகளிலும் மரங்களை நட்டு அவற்றைப் பராமரிக்க வேண்டும்.

குடாநாட்டைப் பொறுத்தவரையில் மரங்களை நடுவதற்குரிய சிறந்த பருவகாலம் தற்போதுள்ள மழைக்காலமேயாகும். இக்காலத்தில் மரங்களை நட்டால் தகுந்த சூழ்நிலையை ஏற்று அவை நன்றாக வளரும் தன்மையைப் பெற்றுக் கொள்கின்றன. இடையே வரும் கோடைகாலத்தில் மட்டும் சிறிதளவு நீர் ஊற்றி வந்தால் மீண்டும் அடுத்த மழைக்காலம் வந்தவுடன் பின்பு தாமாகவே அவை வளரத் தொடங்கிவிடும்.

**செய்தி மடல்**

வீட்டுக் காணிகளில் இலகுவாக வளர்ப்பதற்கேற்ற மரங்கள் பல இருக்கின்ற போதிலும் அவற்றை நட்டுப்பயன் பெற நினைப்பவர்கள் வெகு சிலரே உள்ளனர். இந்த நிலைமையானது எமது சமுதாயத்தைப் பொறுத்த வரையில் ஆரோக்கியமானதொன்றல்ல பல விதத்திலும் பயன் தரக்கூடிய மரங்கள் நிறைய உள்ள போதிலும் இலகுவாக சகல காலநிலைகளையும் தாங்கி வளரக்கூடிய மரங்களை நட்டு நாம் பயன் பெறலாம்.

அந்த வகையில் தேக்கு, சமண்டலை, சவுக்கு, வேம்பு, நெல்லி, பலா போன்ற மரங்களை நாம் நடுவதன் மூலம் குறுகிய காலத்தில் நல்லதொரு பயனைப் பெறலாம். இந்த மரக்கன்றுகளை மக்களுக்கு விநியோகிப்பதற்கென யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அரச மரக்கூட்டுத்தாபனம் மரக்கன்று உற்பத்தி மையம் (Nursory) ஒன்றை உருவாக்கி குறிப்பிட்ட மரக்கன்றுகளை விற்பனை செய்து வருகின்றது.

இந்த மரங்களில் தேக்கு, சமண்டலை ஆகியவை மிகவும் பெறுமதி வாய்ந்தவையாகும். இவற்றை நட்டு வளர்ப்பதன் மூலம் 20 வருட காலத்தில் 20 ஆயிரம் ரூபாவிலிருந்து 30 ஆயிரம் ரூபா வரை விற்க முடியும். வீட்டுக்கு ஐந்து தேக்குமரங்கள் நட்டு வளர்த்தாலும் அவை 20 வருட காலத்தில் ரொக்கமாக ஓர் இலட்சம் ரூபாவைப் பெற்றுத் தரவல்லன. பராமரிப்புச் செலவோ மற்றும் எவ்வித செலவுகளோ இன்றி இலகுவாக வளரக் கூடிய இந்த மரங்களை நட வேண்டுமென எண்ணாதிருப்பது அல்லது மரங்களின் பயன்பாடு பற்றி அறியாதிருப்பது கவலைக்குரிய விடயம் எனக் குறிப்பிடுகின்றார் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் வட மாகாணப் பிராந்திய முகாமையாளர் கே. விஜயரட்ணம்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரையில் சீதனம் என்பது மாறாதநோய் அந்த நோயிலிருந்து ஓரளவு மீட்சி பெறுவதற்கும் மரங்கள் பயன்படுகின்றன.

ஒரு பெண்பிள்ளையின் முதலாவது பிறந்த நாளன்று 10 மரங்களை நட்டால் அந்தப் பிள்ளையின் திருமணப் பராயத்தில் அவற்றின் பெறுமதியை எண்ணிப்பாருங்கள். சீதனத்தின் முழுப்பகுதியையும் தராவிட்டாலும் பெற்றோரின் சுமையில் அரைப் பங்கையாவது குறைக்காதா? 15 ரூபாவுக்கு அரச மரக் கூட்டுத்தாபனத்தின் மரக் கன்று உற்பத்தி மையத்தினால் விற்பனை செய்யப்படுகின்ற இந்த மரக்கன்றுகள சந்ததியின் எதிர்காலத் தேவைக்கு பயன்படும் நிலையை எமது சமூகம் எண்ணாதிருப்பது, பெருங் குறையே.

குறிப்பிட்ட 15 ரூபாவை நாட்டில் உள்ள எந்த வங்கியில் வைப்புச் செய்தாலும் அது 20 வருடத்தில் 20 ஆயிரம் ரூபாவாக மாறமாட்டாது. ஒருமரத்தை நம் தறிக்கும்பொழுது அதற்குப் பதிலாக இரண்டு மரக்கன்றுகளை நட்டால அவை மீண்டும் எமக்குப் பயன்தரும் என்பதை சிந்தித்திருந்தால் குடாநாட்டில் இன்று மரங்கள் அருகி வரும் நிலை தோன்றியிருக்காது.

**-ஜெயஸ்ரீ-**

எனவே இன்றே நாம் அனைவரும் வீட்டுக்கு ஐந்து மரங்கள் நடுவோம். குடாநாட்டில் ஓரேயொரு மரக்கன்றுகள உற்பத்தி மையமே உள்ளது அதன் உற்பத்தியை ஊக்குவிப்பதுடன் நாமும் பயனடைவோம். யாழ். சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள மேற்படி மையத்தில் 15 ரூபாவுக்கு தரமான மரக்கன்றுகள் விற்பனை செய்யப்படுகின்றன. அவற்றை வாங்கி நட்டு அனைவரும் பயன் பெறுவதுடன் எமது பூமியை வளமாக்குவோம் எதிர்காலச் சந்ததிக்கு உதவி செய்வோம். ★

## பாடசாலை நாள்கள் தவிர்த்து விழாக்களை ஏற்பாடு செய்க

### அதிபர்களுக்கு அறிவுறுத்து

வலிகாமம்தெற்கு, டிசெ.16

2000 ஆண்டுக்கான பாடசாலை மட்ட நிகழ்ச்சிகளைத் திட்டமிடும்போது பாடசாலை விளையாட்டுப் போட்டி, பரிசளிப்புவிழா, உண்டாடல் (ஒன்றுகூடல்) போன்ற அனைத்து நிகழ்வுகளும் பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் ஒழுங்கு செய்யப்பட வேண்டுமென வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் வீ. இராசையா பாடசாலை அதிபர்களுக்குபணிப்புரைவழங்கி உள்ளார்.

2000 ஆண்டுக்குரிய வலய, கோட்டங்களுக்கான நாள்காட்டிகளையும், அமுலாக்கல் நிகழ்ச்சித் திட்டங்களையும் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைத்துள்ள கல்விப்பணிப்பாளர், இவ்வருடம் டிசெம்பர் மாதம் முடிவடைவதற்கு முன்பாக பாடசாலைகளின் நாள்காட்டிகளையும் அமுலாக்கல் திட்டங்களையும் தயாரிக்குமாறும் —

இவற்றை வலய - கோட்ட நாள்காட்டிகளுக்கமைவாக தயாரிக்குமாறும்.

அவர் அறிவுறுத்தி உள்ளார்.

மேலும்- நாள்காட்டிகளைத தயாரிக்கும்போது பதில் பாடசாலைகள் நடத்துவதை இயன்றவரை தவிர்த்துக் கொள்ளுமாறும்—

உடற்தகைமை பயிற்சி, பாடசாலையில் கற்றல்- கற்பித்தல், முகாமைத்துவ, இணைப்பாடவிதான செயற்பாடுகள் அனைத்தும் வளம் பெறச் செயற்படுத்துமாறும் அதிபர்களைக் கேட்டுள்ளார்.

## எரிபொருள் நிலையத்துக்கு மின்

முற்றவெளியில் உள்ள யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் விற்பனை நிலையத்திற்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது இங்கு டீசல்பம்பி மின்சாரம் மூலமே செயற்பட்டுவருகின்றது.

இதேபோன்று மண்எண்ணெய்க்கும் தனியான மீற்றர் பம்பி ஒன்றை அமைத்துத் தருமாறு யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தைக்கேட்டுள்ளது [ஐ-17]

## நாளை

மார்கழி 2

வெள்ளிக்கிழமை

திதி: நவமி நண்பகல் 12.02 வரை

நட்சத்திரம்: உத்தரட்டாதி முற்பகல் 8.15 வரை.

சுபநேரம்: 6.22—7.52

ராகுகாலம்: 10.52 - 12 22

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

**உதய வாக்கு**

அறவழியில்நிற்பவர் அடையும் அமைதியும் மகிழ்ச்சியும் இவ்வளவென்று அறுதியிடல் இயலாத செயல்.

அக்கப்பல் தோயல்

## கரையோரப் பகுதிகளில் பாணுக்குத் தட்டுப்பாடு

யாழ் நகர கரையோரத்தில் மக்கள் இடம்பெயர்ந்து வரும் பகுதிகளில் பாணுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

குருநகர் பாசையூர், கொழும்புத்துறை பகுதிகளில் பேக்கறிகளில் உற்பத்தியாகும் பாணின் எண்ணிக்கை குறைக்கப்பட்டதும் —

இடம்பெயரும் மக்கள் பாணைத் தினமும் உணவுக்கு கொள்வனவு செய்வதாலுமே தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

சில பேக்கறிகளில் மாலை நேர பாண் தயாரிப்பு நிறுத்தப்பட்டிருக்கிறது பேக்கறிகளில் பணிபுரியும் தொழிலாளர்களும் இடம்பெயர்ந்து விட்டதால் பாண் உற்பத்தி பாதிக்கப்பட்டிருப்பதாக சில பேக்கறி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-17)

## எழுதுநர் தர ஊழியருக்கு சம்பள உயர்வு அறிவிப்பு

பொது எழுதுவினைஞர் சேவை முதலாம் வகுப்பு, அதிசிறப்புத்தரம் ஆகியவற்றைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு 1997 ஜனவரி முதலாம் திகதியில் இருந்து சம்பள உயர்வு வழங்குமாறு பொது நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது.

இச்சம்பள உயர்வு பற்றிய சுற்றறிக்கை சகல திணைக்களங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வருடம் நவம்பர், டிசெம்பர் மாதங்களுக்கான சம்பள உயர்வுப் பணத்தை உடனடியாக டிசெம்பர் மாதத்துக்குள் வழங்குமாறும் —

1-1-97 முதல் 31-10-99 வரையான காலப்பகுதிக்குரிய நிலுவைகளை பின்னர் வழங்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது (ஐ-152)



## சாயி சிந்தனை

உங்களது அன்பிற்கான தாகத்தை தணித்துக் கொள்ள வேண்டுமா? அவரது கருணைக்காக ஏங்கி வழிபடுங்கள். ஆனந்தத்தை அனுபவிக்க அன்பினை அதிகமாக வளர்த்துக் கொள்ளுங்கள் நீங்கள் எவ்வளவுக்கதிகமாக அன்பைவளர்த்துக் கொள்கிறீர்களோ, அத்தனை அதிகம் ஆனந்தத்தை அனுபவிப்பீர்கள்.

ஆனந்தம் அன்பின்றி கிடைக்கப்பெறாது உண்மையில் அன்புதான் ஆனந்தமாக வடிவெடுக்கிறது

(ஆதாரம்: சனாதனசாரதி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

## சகல வர்த்தகர்களுக்குமான

# அறிவித்தல்

எதிர்வரும் நத்தார், புதுவருட பண்டிகையை முன்னிட்டு 13. 12. 99 தொடக்கம் 01. 01. 2000 வரையான சகல சனி, ஞாயிறு, அரசாங்க வங்கி வர்த்தக விடுமுறை தினங்களிலும் கடைகள் திறந்து வியாபாரம் செய்ய சகல வர்த்தகர்களும் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்பதனையும், இந்த நாள்களில் வேலை செய்யும் ஊழியர்களின் நலன் பேணப்பட வேண்டும் என்பதனையும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்,
இல, 27 நவீன சந்தை, (மேல் மாடி)
யாழ்ப்பாணம். (சி/10294)

## சமூக தொழில்நுட்பக் கல்வி நிலையம்
## (கொம்ரெக்)
சித்தன்கேணி

# விண்ணப்பம் கோரல்

மேற்குறிப்பிட்ட நிறுவனத்தில் தமிழ், ஆங்கில தட்டெழுத்து சுருக்கெழுத்துப் பயிற்சி, தச்சுவேலைப் பயிற்சி, வெல்டிங் பயிற்சி, பெண்களுக்கான தையல் பயிற்சி, டெலிவிஷன், வானொலி திருத்துதல், மோட்டர் மீள முறுக்குதல் பயிற்சி நெறிகள் ஆகியன மிக விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளதால் பயில விரும்புவோர் உடனடியாக விண்ணப்பப் படிவங்களை ரூபா 5/- செலுத்தி அலுவலகத்தில் பெற்று பூர்த்தி செய்து தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

அத்துடன் ஆங்கில தட்டெழுத்து சுருக்கெழுத்து ரி. வி. றேடியோ திருத்துதல் மோட்டர் மீள முறுக்குதல் போன்ற பயிற்சி நெறிகளில் பயிற்றுனருக்கான விண்ணப்பங்களும் கோரப்படுகின்றன.

**விண்ணப்ப முடிவு திகதி 25 - 12 - 1999**

மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி —

நிர்வாகி
கொம்ரெக்,
சித்தன்கேணி. (71790)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
21
—
03
—
1938



உதிர்வு
27
—
12
—
1998

திருமதி
**நகுலேஸ்வரி கோபாலகிருஷ்ணன்**
[ இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன இலிகிதர் ]
திதி: 16 - 12 - 99

குடும்பத்தின் ஒளி விளக்கே!
பாசத்தின் உறைவிடமான செல்ல மகளே!
புன்னகை பூத்த திருமகளே!
ஓராண்டு சென்றாலும் எம் கண்ணீர்த் துளிகள்
காயவில்லை.

மார்கழி மழை உன் பிரிவினிலே
வானம் தெளித்த பன்னீரல்லவா?
நெஞ்சினிலே நினைவலைகள்
நினைவிலும் கனவிலும் உன் அன்பு முகம்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்புக் கணவன்:- கோபாலகிருஷ்ணன்
மகன்:- சுதர்ஷன்,
சகோதரி, பிள்ளைகள்,
உறவினர்கள்.

'பிருந்தாவனம்',
நுணாவில் சந்தி, சாவகச்சேரி. (71779)

## முன்பள்ளி ஆசிரியர் பயிற்சிநெறி

நெல்லியடி, டிசெ. 16

கரவெட்டி பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சிநெறி நேற்று புதன் கிழமையும் இன்று வியாழக் கிழமையும் எதிர்வரும் 26, 27, 28 ஆம் திகதிகளிலும் காலை ஒன்பது மணிக்கு நெல்லியடி முருகமூர்த்தி கோயிலடி சன்மார்க்க முன் பள்ளியில் நடைபெறும்.

'யுனிசெவ்' நிறுவன அனுசரணையுடன் உள்ளூராட்சித் திணைக்களமும் கரவெட்டி பிரதேச செயலகமும் இணைந்து இந்தப் பயிற்சி நெறியை ஏற்பாடு செய்துள்ளன.

(க - 109 - 173)

## நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம், டிசெ. 16

மூத்த எழுத்தாளர் சு. வேலுப்பிள்ளையின் (சு. வே) மணற் கோயில்— உருவக் கதைகள் நூல் அறிமுக விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் செங்கை ஆழியான் தலைமையில் நடைபெறும்.

நூல் வெளியீட்டுரையினை சிற்பி சரவணபவன் நிகழ்த்துவார். [க]

## வாழ்வகத்துக்கு நிரந்தரக் கட்டடம்

மானிப்பாயில் செயற்பட்டு வரும் விழிப்புலன் இழந்தோருக்கான 'வாழ்வகம்' இல்லத்துக்கென நிரந்தரக் கட்டடம் சுன்னாகம் தெற்கில் — காங்கேசன்துறை வீதிக்கு சமீபமாகவுள்ள — காணியில் விரைவில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல் நடும் வைபவம் கடந்த 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் சம்பிரதாய முறைப்படி இடம்பெற்றது.

இக்கட்டடத்தை அமைப்பதற்கு வடபகுதி புனர்வாழ்வு, புனரமைப்பு மீள்குடியேற்ற அதிகார சபை நிதி உதவி வழங்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் கட்டட நிர்மாண வேலைகளை ஒப்பந்த அடிப்படையில் பொறுப்பேற்றுள்ளது.

(ஐ-135-90)

## விளையாட்டு உபகரணங்கள் வழங்கல்

நெடுந்தீவு, டிசெ. 16

நெடுந்தீவில் உள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு கிரிக்கெட், உதைபந்தாட்டம், கரபந்தாட்டங்களுக்கான உபகரணங்களை இன்று வியாழக் கிழமை பிரதேச சபைத்தலைவர் அ. வெ. அரியநாயகம் கையளிப்பார்.

நெடுந்தீவு பிரதேச சபையினால் மேற்படி உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

(ஐ-111)

## சன சமூக நிலையங்களுக்கு தளபாடம்

வலி. தென்மேற்கு, டிசெ. 16

மானிப்பாய் வலி. தென்மேற்கு பிரதேச சபை எல்லைக்குள் துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் எட்டு சனசமூக நிலையங்களுக்கு தளபாட மற்றும் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

மேற்படி வேலைத்திட்டத்திற்கான மதிப்பீட்டுத் திட்டங்களை வலி தென்மேற்கு பிரதேசசபை தொழில் நுட்ப உத்தியோகத்தர் வி. அரியபுத்திரன் மேற்கொண்டுள்ளார்.

மேற்படி 8 சனசமூக நிலையங்களுக்கும் 4 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக பிரதேசசபைத் தலைவர் வ. அ. ஜெயகுமார் தெரிவித்தார். [ஐ-185]

விற்பனையாகின்றன!

**லீலா - 2000**

சித்திரக் கலண்டரில் முன்னோடிகளான

**லீலாவின்**

## சித்திர பஞ்சாங்க நாள் கலண்டர்கள்
## பஞ்சாங்க மாத கலண்டர்கள்


உங்கள் தேவைகளுக்கு

## உதயன் பணிமனை

361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

தோற்றம்
15
—
10
—
1929



மறைவு
27
—
12
—
1998

அமரர்
**கந்தசாமி இரத்தினசபாபதி**
திதி: 16-12-1999 நவமி

எந்நாளும் கோண்டாவில் முத்தட்டி மடம்
எழிலாக வீற்றிருக்கும் வைரவரின்
பொன்னான நாள் போற்றிப் பூசை செய்யும்
பூசகர் இரத்தின சபாபதியின்
வன்னார்ந்த ஆத்மா சாந்தி பெற
வளமார்ந்த ஞான வைரவரின்
இன்னார்ந்த சேவடிகள் இறைஞ்சிடுவோம்!
அன்னாரின் ஆத்மா சாந்தி பெறுக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

திரு, ரமேஷ் (மருமகன்)
திருமதி ரமேஷ் விஜயமலர் (மகள்)
ர. கபிலேஷ் (பேரன்)

கோண்டாவில். [71724]

## நினைவினில் மூன்று



அமரர் **வி. எஸ். குணசிங்கம்**

மலர்வு: 1931 - 02 - 05
உதிர்வு: 1996 - 12 - 16

நாள்களின் நகர்ச்சியில்
நிகழ்வுகளின் தொடர்ச்சியில்
புதிய நினைவுகள் சேர்ந்திருந்தும் — எதிலும்
ஆரம்பக் 'கரு'வாய் இன்றும்
நீங்கள் தான் அப்பா!

— குடும்பத்தினர்

16, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (71796)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலுக்கான ஏற்பாடுகள் குடாநாட்டில் பூர்த்தியாகின

## 5 ஆயிரத்து 500 அரச ஊழியர் கடமைக்கு

யாழ்ப்பாணம், டிசெ. 16

எதிர்வரும் செவ்வாய்க் கிழமை நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான ஏற்பாடுகள் பெரும்பாலும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக யாழ். தேர்தல் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. தேர்தல் கடமைகளில் ஈடுபடுவதற்காக 5 ஆயிரத்து 500 அரச ஊழியர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

குடாநாடு முழுவதும் 148 கொத்தணி வாக்களிப்புநிலையங்கள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தேர்தல் தினமான எதிர்வரும் செவ்வாய்க்கிழமைக்கு முதல் நாள் வாக்குப் பெட்டிகள் மற்றும் வாக்குச் சீட்டுகள் உட்பட அது தொடர்பான உபகரணங்களைதெரிவு செய்யப்பட்ட பொறுப்பான அதிகாரிகள் பொறுப்பேற்க வேண்டும் என்றும் —

அன்றைய தினம் இரவு அவர்கள் ஓர் இடத்தில் தங்க வைக்கப்பட்டு காலையில் தேர்தல் நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளதாகவும் —

தெரிவிக்கப்பட்டது.

தேர்தல் கடமைகளுக்காகத் தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் அனைவரும் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இருந்து வாக்களிப்பு நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

இதற்கென வடபிராந்திய போக்குவரத்துச் சபையினால் போக்குவரத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

தேர்தல் கடமைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கான உணவு மற்றும் குடிதண்ணீர் வசதிகள் அந்தந்தப் பகுதி கிராமசேவை உத்தியோகத்தரால் செய்து கொடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9-5)

### பட்டதாரிப் பயிலுனர்களாக

## ஒரு வருட சேவையை முடித்த 13 ஆசிரியருக்கு நிரந்தர நியமனம்

யாழ்ப்பாணம், டிசெ. 16

தீவகக் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் பட்டதாரிப் பயிலுனர்களாகக் கடமையாற்றி ஒருவருட கால சேவையைப் பூர்த்தி செய்த 13 ஆசிரியர்களுக்கு நிரந்தர ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவர்களுக்கான நியமனக் கடிதங்களை வடக்கு–கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு கடந்த வாரம் வலயக் கல்வி அலுவலகத்துக்கு அனுப்பி வைத்துள்ளது.

இதேவேளை —

இலங்கை ஆசிரிய சேவையின் தரம் 3–1 இல் இருந்து தரம் 2–11க்கு பதவியுயர்வு பெறுவதற்குத் தகுதியுடைய ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு அவர்களில் 8 பேருக்கு தரம் 3–1 இல் இருந்து தரம் 2–11க்கு உள்ளீர்ப்புச் செய்யப்பட்டமைக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

பட்டதாரி ஆசிரிய நிரந்தர நியமனம் பெற்றோர் மற்றும் பதவியுயர்வு பெற்றோர் தமக்குரிய நியமனக் கடிதங்களை வலயக்கல்வி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (ஐ-7)

## கசிப்பை விற்க எடுத்து வந்தவர் இளைஞர் குழுவிடம் சிக்கினார்

### நீர்வேலிப் பகுதியில் சம்பவம்

வலி. கிழக்கு, டிசெ. 16

உயிர்க்கொல்லியான கசிப்பை விற்பனை செய்வதற்காகச் சைக்கிளில் கொண்டுசென்ற நபர் ஒருவர் இளைஞர்கள் குழு ஒன்றிடம் சிக்கினார்.

இச்சம்பவம் கடந்த ஞாயிறன்று நீர்வேலி பகுதியில் இடம்பெற்றது.

இவர் நீர்வேலிப் பகுதியில் விற்பனை செய்வதற்காக உரும்பிராய் பகுதியிலிருந்து 13 போத்தல்களில் கசிப்பை மறைத்து எடுத்து வந்த வேளை நீர்வேலிப்பகுதியைச் சேர்ந்த பொது அமைப்புக்களின் உறுப்பினர்களைக் கொண்ட இளைஞர் குழு ஒன்று சந்தேகத்தின் பேரில் அவரை விசாரித்தபோது கசிப்பை மறைத்து எடுத்து வந்தது அம்பலமாகியது. உடனடியாகவே அவர் கொண்டுவந்த கசிப்பை நிலத்தில் ஊற்றியதுடன் அந்நபரை எச்சரித்து அனுப்பினர். (ஐ-180)

### ஆட்சி மாற்றத்தை எதிர்பார்த்து

## கொழும்பு பங்குச் சந்தையில் பங்குவிலைச் சுட்டெண் உயர்வு

கொழும்பு, டிசெ. 16

கொழும்பு பங்குச்சந்தையில் பங்குவிலைச் சுட்டெண் கடந்த இரு தினங்களாக திடீரென உயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி அனைத்துப் பங்குச் சுட்டெண்களும் 15 புள்ளிகளால் திடீரென அதிகரித்து 602.65 பெறுமானத்தைப் பெற்றுள்ள தாகவும்— நாட்டில் ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்படலாம் என்ற எதிர்பார்ப்பிலேயே பங்குச் சந்தைச் சுட்டெண்கள் திடீரென அதிகரித்துள்ளதாக பங்குச் சந்தை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதே வேளை —

கொழும்பில் பிரபலமான 'லங்கா பங்குச் சந்தை' சுட்டெண்ணும் 42 புள்ளிகளால் அதிகரித்து 1010.65 பெறுமானத்தைப் பெற்றுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவான அரசியல் அலை வீசுவதாகவும் —

அதனாலேயே பலர் பங்குச் சந்தைகளில் முதலீடு செய்வதில் நாட்டம் செலுத்தி வருவதாகவும் —

பங்குச் சந்தை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-7)

## முளைத்திறன் அற்ற விதைகள் விநியோகம்

உலக உணவு விவசாய ஸ்தாபனத்தால் அண்மையில் வழங்கப்பட்ட விதைநாற்றுக்கள் முளைதிறன் அற்றவையாக உள்ளதாக விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேற்படி ஸ்தாபனத்தால் ஆயிரத்து 200 விவசாயிகளுக்கு தலா ஒரு கிலோ வீதம் போஞ்சி, கரட் ஆகிய விதைகள் வழங்கப்பட்டிருந்தன. இவற்றைப் பெற்றுக்கொண்ட விவசாயிகள் அவை முளைதிறன் அற்றவையாகக் காணப்பட்டதை அடுத்து மிகுந்த ஏமாற்றமடைந்துள்ளனர்.

விநியோகிக்கப்பட்ட விதைகள் தரமானவையாக உள்ளதா என்பதனை அதற்குப் பொறுப்பானவர்கள் கவனத்தில் கொள்ளவில்லையா என பாதிக்கப்பட்ட விவசாயிகள் கேள்வி எழுப்பினர் இனி வரும் காலங்களிலாவது இப்படியான தவறுகள் நடைபெறாமல் தவிர்ப்பதுடன் தரமான விதைகளை உரிய திணைக்களங்கள் மூலம் உறுதிப்படுத்திய பின்பு வழங்கினால் ஏமாற்றத்தைத் தவிர்க்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-10)

## சுயதொழில் உதவி

சண்டிலிப்பாய், டிசெ 16

மாதாந்த பொதுசன உதவிப் பணம் பெறும்கணவனை இழந்த விதவைப் பெண்களுக்கு புனர்வாழ்வு வழங்கும் திட்டத்தின் கீழ் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகப் பிரிவில் நான்கு விதவைப் பெண்களுக்குசமூகசேவை த்திணைக்களத்தினால் தலா 10 ஆயிரம் ரூபா சுயதொழில் முயற்சிக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் அ. அமிர்தலிங்கம் இத்தகவலைத் தெரிவித்தார். (ஐ-135

## சந்நிதியான் ஆச்சிரம திருவாசக விழா

கொழும்புத்துறை, டிசெ. 16

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை நடத்தும் திருவாசகவிழாவும், பண்ணிசைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு வைபவமும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்குப் பேரவை மண்டபத்தில் பேரவையின் தலைவர் சு. திருப்பரங்கிரிநாதன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்கவுள்ளார். (ஐ-30)

## விளையாட்டு உபகரணங்கள் கிடைத்தன

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன (ஐ-86)

# செய்திக் கொத்து

### மலசலகூடம்

## நிறுவியோருக்கு மானிய உதவி

சண்டிலிப்பாய், டிசெ. 16

ஆனைக்கோட்டை பொது சுகாதார பரிசோதகர் பிரிவில் சுகாதாரத் திணைக்களத்தின் விதிகளுக்கிணங்க மலசல கூடங்களை நிறுவியுள்ள 19 பேருக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதம் மானியக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

ஆனைக்கோட்டை, சுதுமலை, நவாலி ஆகிய பகுதிகளில் புதிதாக மலசல கூடத்தை அமைக்க விருப்பவர்கள் இந்த மானிய உதவியைப்பெற விரும்பினால் அது பற்றிய விவரங்களை தமது அலுவலகத்தில் தொடர்பு கொண்டு அறிந்துகொள்ள முடியும் என்று ஆனைக்கோட்டை பொது சுகாதாரப்பரிசோதகர் விதயாமோகன் தெரிவித்துள்ளார். (ஐ-135)

### கட்டடம்

## புனரமைப்பு

திருநெல்வேலி, டிசெ. 16

கந்தர்மடம் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கக்கட்டடமும் கலைமகள் சனசமூக நிலையமும் அகதிகளுக்கான ஐ நா. தூதரகம வழங்கிய நிதி உதவி மூலம் புனரமைப்பு செய்யப்பட்டுவருகின்றன.

இப் புனரமைப்புப் பணிகளுக்காக அகதிகளுக்கான ஐ நா. தூதரகம் மூன்று லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளதாக சங்கத் தலைவர் க. சிவராமலிங்கம் தெரிவித்தார். (ஐ-135)

## கௌரவிப்பு

வலி. வடக்கு, டிசெ. 16

வலி. வடக்கு பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட ஊனமுற்றோர்தின நிகழ்வில் ஊனமுற்ற 148 பேர் கௌரவிக்கப்பட்டனர்.

பிரதேச செயலர் திருமதி ப. திலகநாயகம் போல் தலைமையில்இந்தநிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஊனமுற்றவர்கள் பங்கு பற்றிய இரண்டு சில்லு மூன்று சில்லு சைக்கிள் ஓட்டப் போட்டிகளும் இடம்பெற்றன. (க-86)

## எய்ட்ஸ் நோய் தடுப்பு விளக்கம்

சண்டிலிப்பாய், டிசெ. 16

சர்வதேசஎய்ட்ஸ் நோய் தினத்தை முன்னிட்டு தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் தாய்-சேய் சிகிச்சை நிலையங்களிலும் கர்ப்பிணித்தாய்மார் சிகிச்சை கிளினிக்குகளிலும் எய்ட்ஸ் நோய் பற்றியும் அதற்குரிய தடுப்பு முறைகள் பற்றியும் குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களினால் விளக்க பிரசார உரைகள் நிகழ்த்தப்பட்டன.

உடுவில் அரசினர் வைத்தியசாலை. இணுவில் அரசினர் வைத்தியசாலை, ஆகிய இடங்களில் நடைபெற்ற கர்ப்பிணித் தாய்மாருக்கான கிளினிக்குகளிலும் அவ்வப் பிரிவு குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களினால் எய்ட்ஸ் நோய் பற்றிய விளக்கவுரைகள் நிகழ்த்தப்பட்டன. (ஐ-135)

## வீடமைப்புக் கடன்

மானிப்பாய், டிசெ. 16

மானிப்பாய் மேற்கு கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட கட்டுடைக் கிராமத்தில் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள 39 பேருக்கு வீடுகளைப் புனரமைப்பதற்கு என முப்பதாயிரம் ரூபா வீதம்கடன் வழங்கப்பட்டுள்ளது. (க-90)

## பண்ணிசை ஓதலில் முதலிடம்

வலி.தெற்கு, டிசெ. 16

வலிகாமம் கல்வி வலயத்தில் நடைபெற்ற திருமுறைவிழாவில் பண்ணிசை ஓதலில் செல்வி ஜெயப்பிரியா ஜெயநாதன் (ஆண்டு 8) ஜெயநாதன் சநதுருகேசன் (ஆண்டு 3) ஆகியோர் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டனர்.

இவர்கள் இராமநாதன் கல்லூரியைச் சேர்ந்தவர்களாவர். (ஐ-152)

## வெள்ளி விழா

கொழும்புத்துறை டிசெ. 16

யாழ் புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலய அதிபர் அருட் செல்வி ஜி செல்வராணியின் வெள்ளி விழா நிகழ்வுகள் அண்மையில் வித்தியாலய மண்டபத்தில் உப அதிபர் எம். ஆரோக்கியநாதர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு யாழ். மேலதிக அரசாங்க அதிபர் இ. வைத்திலிங்கம் பிரதம விருந்தினராகவும், யாழ் வலயக் கல்வித்திணைக்கள கணக்காளர் த. சுந்தரபாலன் சிறப்பு விருந்தினராகவும், யாழ். மறை மாவட்ட குருமுதல்வர் ஈ. செல்வராசா அடிகள் கௌரவ விருந்தினராகவும் பங்குபற்றிச் சிறப்பித்தனர்.

வித்தியாலய மாணவர்களின் பலகலை நிகழ்ச்சிகளும் சிறப்பாக நடைபெற்றன. (ஐ-30)

## வீட்டுத்தோட்ட பயனாளிகள் தெரிவு

நெல்லியடி, டிசெ. 16

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக நிதி உதவியுடன் போஷாக்குநிறைந்த வீட்டுத்தோட்ட திட்டத்தின் கீழ் 20 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான மரக்கறி விதைகளும், தேசி, பப்பா மரக்கன்றுகளும் விவசாய போதனாசிரியர் ஏ கோபிநாத்தினால் வழங்கப்பட்டுள்ளன. [ஐ-109]

## நடைபாதை அமைப்பு

நெல்லியடி, டிசெ. 16

வல்வெட்டித்துறை மாவட்ட மருத்துவமனையில், முதலாம் வார்ட்டையும், இரண்டாம் வார்ட்டையும் இணைக்கும் வகையில் சுமார் 30 ஆயிரம் ரூபா செலவில் சீமெந்திலான நடைபாதை அமைக்கப்பட்டிருக்கின்றது. (ஐ-109)

## கிறிஸ்மஸ் விழா

சண்டிலிப்பாய், டிசெ. 16

தெல்லிப்பழை மாவட்ட அரசினர் வைத்தியசாலை ஊழியர் நலன்புரிச் சங்கம் நடத்தும் கிறிஸ்மஸ் நத்தார் விழா எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது. (ஐ-185)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பாவித்த கொம்பியூட்டர் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பூம்பொழில் கே. கே. எஸ். வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.
(71795)

## புறொயிலர் குஞ்சுகள்

Bairaha Farm's புறொயிலர் குஞ்சுகள் (20-12-99) திங்கடகிழமை மாலை விநியோகம் செய்யப்படும். தொடர்புகளுக்கு: வை. சிவகுமார், நாவலர் வீதி (அரவிந் வீடியோ அருகில்) அத்தியடி, யாழ்ப்பாணம். (71798)

## தவறிவிட்டது

முத்து வானதி ஆகிய எனது தேசிய, விசேட அடையாள அட்டைகள் யாழ்ப்பாணத்துக்கும் தெல்லிப்பழைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து போஸ்கோ, இல 3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில ஒப்படைத்து உதவவும்
(71794)

கலைவாணி மில் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு என்னும் முகவரியைச் சேர்ந்த சுப்பிரமணியம் சுதர்சன் என்பவரது. விசேட அ. அட்டை 15-11-99 இல் திருநெல்வேலிச் சந்தியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து குமரன் பலசரக்கு மாளிகை, திருநெல்வேலி என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்.
(71781)

## திருமண சேவை

எம்மிடம் எல்லா மதத்திலும் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் உண்டு. கிறிஸ்தவ மணமகன், மணமகள் தேவை. படம், சாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். துர்க்கா திருமணசேவை 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல. 021-3383 (71797)

## களைகொல்லிகள் தட்டுப்பாடு

யாழ்ப்பாணக் குடாநாட்டில் களைகொல்லி கிருமி நாசினிகளுக்குப் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது

களை கொல்லிகளான லசோ, றோல் ஆகிய கிருமி நாசினிகளின்றி களைகளை அழிக்க முடியாமல் விவசாயிகள் திண்டாடுகிறார்கள். குறிப்பாக வெங்காயப் பயிர்ச் செய்கை களை கொல்லி இன்மையால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.
(ஐ-173)

## பிற்போடப்பட்டுள்ளது

எதிர்வரும் 18 ஆம், 19 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த

**வேள்வித்தீ**

[நாடகம்]

தற்போது நிலவும் சூழ்நிலை காரணமாக பிற்போடப்பட்டுள்ளது.

புதிய திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும்.

**MSU**

[71803]

**4 ?**

(சி/10183)

# விற்பனைக்கு

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட புதிய மேட்டுப்பாளையம் உருளைக்கிழங்கு.

ஒரு கிலோ 70/-

**புதிய விநாயகர் களஞ்சியம்,**
211 A, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(71801)

# விற்பனைக்கு

- தொலைநகல் இயந்திரம் (FAX MACHINE)
- குளிர்சாதனப் பெட்டிக்குரிய யூனிற் வகைகள்
- வெங்காயம் பொதி செய்யும் நெற் பாக்குகள்
- வெங்காயம் பொதி செய்யும் மரப்பெட்டிகள்
- ஐஸ்கிறீம் கோண்
- ஐஸ்பழ தயாரிப்புக்குரிய குச்சி வகைகள்

என்பனவற்றை மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

**நாதன் களஞ்சியம்**
213C, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 2916

(71800)

# அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

## விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் 75 ஆம் ஆண்டு

பூர்த்தியினை முன்னிட்டு விலை மதிப்பீட்டுத் திணைக்கள யாழ். மாவட்டக் காரியாலயத்தினால் 15-12-99 இல் நடத்தப்பட்ட அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

1 ஆம் பரிசு – சீட்டு இல. 1838
2 ஆம் பரிசு – சீட்டு இல. 2623
3 ஆம் பரிசு – சீட்டு இல. 1072

ஐந்து ஆறுதல் பரிசுகள்

| | | |
|---|---|---|
| 1) 0871 | 2) 2012 | 3) 0234 |
| 4) 2886 | 5) 2199 | |

விலை மதிப்பீட்டுத் திணைக்கள
நலன் புரிச்சங்கம்

இல. 148, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

விளம்பர அன்பளிப்பு;

**விஜய் போட்டோ**
கோண்டாவில் வீதி.
இருபாலைச் சந்தி, இருபாலை.

(71809)

# 31 ஆம் நாள் நினைவலைகள்



மலர்வு 27 – 03 – 1936

உதிர்வு 16 – 11 – 1999

அமரர்

**கதிர்காமு செல்லையா**

மகிழ்ச்சிப் பூக்களைச் சுருக்கி
இறைவனடி சேர்ந்த எம்
அன்புத் தெய்வமே! எமைப்
பிரிந்து நாள்கள் முப்பத்
தொன்றாயினும் உங்கள்
நினைவலைகள் எம் நெஞ்சை
விட்டகலாது!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

'மலர் பவனம்'
கொற்றாவத்தை.

# அனர்த்தங்களைத் தவிர்க்க:

# 'குமுதினி' பயணிகள் படகில் திசைகாட்டி பொருத்தப்படும்

நெடுந்தீவுச் சேவையில் உள்ள அரசு படகான குமுதினிக்கு உடனடியாக திசை காட்டிக் கருவி பொருத்த நடவடிக்கை எடுக்குமாறு நெடுந்தீவுப் பிரதேச சபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

தற்போது பலத்த மழை பெய்துவருவதால் படகு உரிய இடத்தைச் சென்றடைவதில் பல்வேறு கஷ்டங்களை எதிர் நோக்குவதாகவும் —

சமீபத்தில் நெடுந்தீவில் இருந்த பயணிகளுடன் ஊர்காவற்றுறைக்குப் புறப்பட்ட குமுதினிப்படகு பலத்த மழையில் திசை தெரியாது தத்தளித்து மீண்டும் நெடுந்தீவுக் கரையைச் சேர்ந்தது குறித்தும் —

தீர்மானத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தீர்மானத்தை யாழ். வதி அபிவிருத்தி அதிகார சபைக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

[ஐ--111]



இப்பொழுது யாழ்ப்பாணத்திலும்

CEDRIC

மண்ணெண்ணெய் கேஸ் குகர்

- சிலிண்டர் தேவையில்லை
- கேஸைப் போன்ற நீலச்சுவாலையுடன் எரியக்கூடியது.
- மணம் இல்லை. வெடிக்காது. காற்று அழுத்தம் தேவையில்லை.

தொலைபேசி இல. 323223
98, Braybrook Place, Colombo 02.
தலைமை அலுவலகம்
172, Kensington Church Street, Kensington, London. W8 BN
Tel: 0171792 1881 (10 Lines) Fax: 0171 243 8034



ஏஜண்டுகள் தேவை

(சி/10207)


# 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் செல்லையா சுப்பிரமணியம்**

[இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்]

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 03 – 03 – 1928 | 02 – 01 – 1993 |

திதி: 16 – 12 – 1999

ஆண்டுகள் பலவானாலும்
அணையாத எம் குலவிளக்கே!
காலத்தின் கோலமதால் காலன் இட்ட கட்டளையால்
இடையில் எங்களை விட்டுப் பிரிந்தீர்களே! அப்பா
உங்கள் இலட்சியக் கனவுகள் — நனவாகும்
வேளைதனில் அதைக்காண நீங்கள் இங்கு இல்லை
அப்பா
கனவுகள் நனவாகும் நாள் வெகுதூரம் இல்லை.

உங்கள் வரவை எதிர்பார்த்து ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள்.

கண்டி வீதி,
கொடிகாமம்.

(சி/10212)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால்நடை பணிமனை ஊடாக

# ஆயிரத்து 500 கோழிக் குஞ்சுகள் நாளை விநியோகிக்கப்படும்

வலி.கிழக்கு, டிசெ. 16

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் உள்ள கோழிப் பண்ணையில் குஞ்சு பொரிக்க வைக்கும் நிலையத்தில் இருந்து பால் பிரிக்கப்படாத சுமார் ஆயிரத்து 500 கோழிக் குஞ்சுகள் பயனாளிகளுக்கு விநியோகிக்கப்பட உள்ளன.

இக் கோழிக் குஞ்சுகள் நாளை வெள்ளிக்கிழமை கால்நடை வைத்திய அதிகாரி பணிமனை மூலம் விநியோகிக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயிரத்து 500 சேவல் இன குஞ்சுகளே விநியோகிக்கப்பட உள்ளன.

யாழ்ப்பாணம் கால்நடை வைத்திய அதிகாரி பணிமனை ஊடாக ஆயிரம் குஞ்சுகளும் —

கோப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி பணிமனை மூலம் 500 குஞ்சுகளும் விநியோகிக்கப்படும் என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-180)

## பதிவாளர் அலுவலக பணிகள் நிறுத்தம்

யாழ்ப்பாணம், டிசெ. 16

யாழ். மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் இன்று முதல் இம்மாத இறுதிவரை பொது மக்கள் தொடர்பான அலுவல்கள் எவையும் கவனிக்கப்பட மாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகளுக்கான விண்ணப்பங்களும் பெறப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டது.

எனினும் அவசரதேவைகள் உள்ளோர் மாவட்டப் பதிவாளருடன் தொடர்பு கொள்ளலாம் என்று மாவட்ட பதிவாளர் எஸ். சதாசிவ ஐயர் தெரிவித்தார். (ஐ 6)

## தபாலகங்கள் இயங்குகின்றன

யாழ்ப்பாணம், டிசெ.16

தென்மராட்சியில் கடந்த சில தினங்களாக நிலவி வந்த பதற்ற நிலை காரணமாக மூடப்பட்டிருந்த சாவகச்சேரி மற்றும் கைதடி தபாலகங்கள் நேற்றுமுதல் மீண்டும் வழமைக்குத் திரும்பி உள்ளன.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகளை அப்பகுதி மக்கள் இந்த தபாலகங்களில் இருந்து பெற்றுக்கொள்ளலாம் என்று யாழ். மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் எஸ். தர்மராசா தெரிவித்தார்.

டாக்டர்கள் இல்லை!

# மந்திகை வைத்தியசாலையில் மருத்துவசேவை பாதிப்புறும் நிலை!

யாழ்ப்பாணம், டிசெ 16

பருத்தித்துறை மந்திகை ஆஸ்பத்திரியில் டாக்டர்கள் இல்லாமையினால் மருத்துவ சேவைகள் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக மாகாண சுகாதாரப் பணிப்பாளர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த வைத்தியசாலையில் கடமையாற்றிய ஏழு தென்பகுதி டாக்டர்கள் பாதுகாப்புக் காரணங்களினால் இங்கு கடமையாற்ற முடியாதெனத் தெரிவித்து நேற்று முன்தினம் கொழும்புக்குப் புறப்பட்டுவிட்டனர்.

இதேவேளை — இந்த வைத்தியசாலைக்கு பொறுப்பான மாவட்ட வைத்திய அதிகாரி நான்கு மாத லீவில் கொழும்புக்குச் சென்றுவிட்டார்.

தற்பொழுது இங்கு கடமையாற்றும் ஒரேயொரு வைத்திய அதிகாரிக்குக் கொழும்புக்கு உடனடி இடமாற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

டாக்டர்கள் இல்லாதநிலையில் இந்த வைத்தியசாலைக்கு செல்லும் நோயாளர்களுக்கு தகுந்த சிகிச்சையளிக்க முடியாத நிலையேற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

'இந்த வைத்தியசாலைக்கு உடனடியாக டாக்டர்களை நியமனம் செய்ய முடியாதா?' — என்று எமது செய்தியாளர் சுகாதாரத் திணைக்கள மாகாண பிரதிப்பணிப்பாளர் டாக்டர் கே. ரி. சிவபாதத்திடம் கேட்டபோது — உடனடியாக நியமனம் செய்வதற்கு யாழ்ப்பாணத்தில் டாக்டர்கள் இல்லை. இது குறித்து செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு மற்றும் பிரான்ஸ் மருத்துவக்குழு (எம். எஸ். எவ்.) போன்ற சர்வதேச நிறுவனங்களோடு தொடர்பு கொண்டுதான் டாக்டர்களை நியமனம் செய்யவேண்டும்' — என்று அவர் பதில் அளித்தார்.

இதேநேரம் — இந்த வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அவசர நோயாளர்களில் ஒரு பகுதியினர் யாழ். ஆஸ்பத்திரிக்கு நேற்று மாற்றப்பட்டனர். (உ-3-5-109)

## தென்னங்கன்று விநியோகம்

யாழ்ப்பாணம், டிசெ. 16

வலி.மேற்கு பிரதேச சபையால் இன்று அப்பகுதி மக்களுக்கு ஒரு லட்சம் தென்னங்கன்றுகள் இலவசமாக விநியோகிக்கப்பட உள்ளன.

பிரதேச சபை தலைமையகத்தில் வைத்து இன்று காலை 10 மணிக்கு தென்னங்கன்றுகள் விநியோகிக்கப்பட உள்ளன. (ஐ-6)

★ ★ ★

நெல்லியடி, டிசெ. 16

விவசாயத் திணைக்களம் வடமராட்சியில் புலோலி மற்றும் அம்பன் கமநலசேவை நிலையங்களுக்கூடாக, தென்னை வளர்ப்போருக்கு குறுங்கால நல்லின தென்னங்கன்றுகளை குறைந்த விலைக்கு வழங்கி வருகின்றது. (ஐ-109-173)

# புலிகள் மீது குற்றம் சுமத்தி யாழ். படைத்தரப்பு அறிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 16

குடாநாட்டில் மக்கள் இடம் பெயர்வது தொடர்பாக விடுதலைப் புலிகளைக் குற்றஞ்சாட்டி யாழ். படைத்தரப்பு அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

பலாலியில் உள்ள வடபகுதி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் விடுத்த அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழ் மக்களைத் தமிழ் இனத்தவர்களே அழித்தொழிக்கும் வகையில் கடந்த 99-12-12 ஆம் திகதி புலிகள் மேற்கொண்ட ஷெல் தாக்குதல் காரணமாக சாவகச்சேரி பகுதியில் வசித்து வந்த 787 அப்பாவித்தமிழ்குடும்பங்கள் தமது இருப்பிடங்களை விட்டு இடம்பெயர்ந்துள்ளன. விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடுவது இப்படித்தானா?

தற்போது நடைபெறும் கல்வி பொதுத்தராதர சாதாரணப் பரீட்சையில் மாணவர்கள் சமூகமளிக்க முடியாத நிலையை உருவாக்கி புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் ஷெல் தாக்குதலை மேற்கொள்ளும்படி கட்டளையிட்டது தமிழ் மக்களை அழிப்பதற்காகவா?

தமிழ் மக்களுக்கு புலிகள் பெற்றுக் கொடுக்கும் விடுதலை இது தானா?

சாவக்கச்சேரிப் பகுதியில் அமைதியான முறையில் வசித்த மக்கள் அன்றாட தேவைகளைப்பூர்த்தி செய்து கொண்டு, அமைதியான முறையில் வாழ்க்கை நடத்தி வந்தனர். ஆனால் இவர்களின் நிலைமையை தற்போது துர்ப்பாக்கியநிலைக்கு ஆளாக்கியமை தமது இனத்திற்கே செய்த துரோகமாகும்

இவ்வாறு அமைதியாக வசித்து வந்த மக்களை உடுத்திய உடையுடன் வெளியேறச் செய்தமை மிருகத்தனமான செயலாகும் இதனால் அப்பாவி மக்களது விவசாயம், வர்த்தகம் போன்றவை பாதிக்கப்பட்டு வாழ்க்கையும் சீர்குலைக்கப்பட்டுள்ளது. ஆனால் பாதுகாப்புப் படையினரும் அரசும் இணைந்து பெற்றுக் கொடுத்த கடற்றொழில்வசதிகள், ஊரடங்குச் சட்டம் தளர்த்துதல் போன்ற காரணத்தினால் இப்பகுதியில் வசித்த மக்கள் கடந்த காலங்களில் தமது தொழிலைச் சிறந்த முறையில் மேற்கொண்டு தமதுவாழ்க்கையை நடத்தி வந்தனர். இதனால் உங்களது பிள்ளைகள் சந்தோசமாக வசித்து வந்ததை நீங்களே அறிந்திருப்பீர்கள் அல்லவா?

தமிழ் சிங்கள மக்கள் ஜாதி பேதமின்றி புனித தலமாக மதிக்கப்பட்டு வந்த மடுமாதா தேவாலயம் மீதும் புலிகள் ஷெல் தாக்குதலை மேற்கொண்டு அப்பாவி மக்களைப் படுகொலை செய்தனர். இது போன்ற செயல்களை மேற்கொண்டு புலிகள் இயக்கத்தின் தலைமைத்துவம் இரத்த வெறிபிடித்த அமைப்பு என்பதை ஏற்கனவே சர்வதேச அமைப்புக்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் மிகவும் கஷ்டமான நிலைக்கு மத்தியில் மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களது வீடுகளை சேதப்படுத்தி தெருக்களில் அலைய வைத்துள்ளனர். தற்போது பெய்யும் மழை மற்றும் கடும் குளிருக்கும் மத்தியிலும் தமது பிள்ளைகளைப் பராமரிக்க முடியாமல் மக்கள் நோய் வாய்ப்பட்டு கஷ்டப்படுவார்கள் என்பதை புலிகள் அறிந்திருந்தும் கூட இவ்வாறு செயற்படுவது மனித நேயமற்ற செயலாகும்.

இவ்வாறான நடவடிக்கைகளைக் கண்டிக்கிறோம் யாழ். குடாநாட்டு மக்களாகிய உங்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள சுதந்திரத்தையும், உரிமைகளையும் பறித்தெடுக்கும் நோக்கத்தில் புலிகள் மடுமாதா தேவாலயம் மீது மேற்கொண்ட தாக்குதலைப் போன்று யாழ்ப்பாண மக்களையும் பழிவாங்க முயற்சி செய்வது சாதாரணத்திற்கும் மனித நேயத்திற்கும் ஒப்பாகுமா? இது பற்றி ஒரு நிமிடம் சிந்தித்துப் பாருங்கள், புலிகள் இயக்கம் விடுதலையாளர்கள் அல்லர் என்பதையும் அவர்கள் பயங்கரவாதிகள் என்பதையும் உங்களது உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க புலிகள் முன்வரமாட்டார்கள் என்பது இந்தத் தாக்குதல் மூலம் நன்றாகப் புலப்படுகின்றது அல்லவா? — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ஆறு பெண்கள் உட்பட 18 பேர் காங்கேசன் தடுப்பு முகாமில்!

யாழ்ப்பாணம், டிசெ 16

குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் கைது செய்யப்பட்டவர்களில் 6 பெண்கள் உட்பட மொத்தம் 18 பேர் தற்போது காங்கேசன்துறை தடை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை தடை முகாமுக்கு நேற்று சென்று அங்குள்ள கைதிகளைப் பார்வையிட்டுத் திரும்பிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரி எஸ். ஜீவேஸ்வரா இத்தகவலைத் தெரிவித்தார்.

கடந்த வாரம் காங்கேசன்துறை தடை முகாமுக்கு அனுப்பப்பட்ட 7 பேரின் விவரம் வருமாறு:-

கந்தசாமி விமலசேனாதிராஜா, பொடி மாத்தையா தனுசன், சண்முகம் சுதர்சன், மகாலிங்கம் ஜெகதீஸ்வரன், இராமலிங்கம் மனோகரன், தங்கராசா சதீஸ், பாலசிங்கம் புஸ்பராசா. (உ-3-9)

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விவரம்

யாழ்ப்பாணம், டிசெ 16

யாழ் குடாநாட்டில் இருந்து வெளி இடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவாகளின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் [இம்மாதம் 14 ஆம் திகதி வரை] பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு: —

சங்கானை

(134452ஏ), (134453ஏ), [134453பி], (134453சி), (134453டி], [134453ஈ], [134495ஏ], [134595பி],

காவெட்டி

[127502ஏ], [132806ஏ],

கோப்பாய்

[123737ஏ], [123737பி], [123796ஏ], [123804ஏ], [123933ஏ], [123933பி], [123933சி], [124152ஏ], [124152பி], [124152சி], [124152டி], [124161ஏ), (124182ஏ], (124182பி], (124182சி), (124182டி),

பருத்தித்துறை

[132856ஏ], [132957ஏ),

தெல்லிப்பழை

(134551ஏ).

உடுவில்

(121265ஏ), (123814ஏ), (123828ஏ), (123828பி), (123895ஏ), (119278ஏ), (119278பி), (119278சி), (134423ஏ).

## குறுகியகால விவசாயப் பயிற்சி

யாழ்ப்பாணம், டிசெ.16

திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தின் 2000 ஆம் ஆண்டுக்கான குறுகிய கால விவசாயப் பயிற்சி நெறிகள் ஜனவரி இறுதி வாரத்தில் ஆரம்பமாகவுள்ளன.


எனவே மேற்படி பயிற்சி நெறியில் கலந்து கொள்ளவுள்ளோர் தமது பகுதி விவசாயப் போதனாசிரியர்களின் சிபாரிசுடன் தமது விண்ணப்பங்களை இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பாக அனுபபி வைக்குமாறு உதவி விவசாயப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஐ-10)




அன்பிற்கினிய மக்களே!

இடம்பெயர் வாழ்க்கை இனியும் வேண்டாம்.
ஈ.பி.டி.பியின் அரசியல் பலத்தை அதிகரித்து
எட்டுவோம் எம் அரசியல் தீர்வை
வாக்களிப்பீர் சந்திரிகாவிற்கு!

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி
(ஈ. பி. டி. பி.)



1

[71814]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லங்கா சிமெந்து நிறுவன சம்பளம்

யாழ்ப்பாணம், டிசெ. 16

லங்கா சிமெந்து நிறுவன ஊழியர்களுக்கான ஒக்டோபர் மாதச் சம்பளக் கொடுப்பனவு நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை யாழ். வர்த்தக வங்கிக்கிளையில் வைத்து வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நத்தார் பண்டிகைக் கால கொடுப்பனவும் சம்பளத்துடன் இணைத்து வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (உ-7)


IIS Jaffna, Sri Lanka
INSTITUTE OF INFORMATICS STUDIES

5,000
மாணவர்களுக்கான
மாபெரும்
புலமைப்பரிசில்
திட்டம்-2000

எமது நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் கணனிக்கல்விக்கான மேற்படி திட்டத்தில் பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் ஆர்வம் காட்டி வருவதாலும், அதிபர்கள், பெற்றோர்கள் மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க நாட்டின் தற்போதைய சூழ்நிலையினைக் கருத்தில் கொண்டு

விண்ணப்ப முடிவு திகதி
14-12 1999 இல்
இருந்து 31-12 1999
வரை மேலும் இரு வாரங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது என்பதை உங்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

– இயக்குநர்
IIS
100, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/10208)


# தென்மராட்சிப்பிரதேசத்தில் 4,000 மக்கள் இடம்பெயர்வு

தென்மராட்சி, டிசெ 16

தென்மராட்சிப் பிரதேசத்தில் நேற்றுக் காலை வரை ஏழு கிராம அலுவலர் பிரிவுகளில் இருந்து 982 குடும்பங்களைச் சேர்ந்த நாலாயிரத்து 29 பேர் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி பாடசாலைகள், கோயில்கள் மற்றும் உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர்.

தனங்களப்பு கிராம அலுவலர் பிரிவில் 145 குடும்பங்களைச் சேர்ந்த 543 பேரும்—

மறவன்புலோ பிரிவில் 333 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 199 பேரும் —

கைதடி நாவற்குழி பிரிவில் 222 குடும்பங்களைச் சேர்ந்த 949 பேரும்

கோவில் குடியிருப்புப் பிரிவில் 125 குடும்பங்களைச் சேர்ந்த 645 பேரும் —

நுணாவில் கிழக்கு நகரை அண்டிய பகுதிகளில் 70 குடும்பங்களைச் சேர்ந்த 359 பேரும் —

சாவகச்சேரி நகரப் பிரிவில் 22 குடும்பங்களைச் சேர்ந்த 85 பேரும் —

கொடிகாமம் வடக்கு பிரிவில் 65 குடும்பங்களைச் சேர்ந்த 245 பேரும் — தமது இருப்பிடங்களில் இருந்து வெளியேறியுள்ளனர்.

மேலும், கைதடி — நாவற்குளி தெற்குப் பகுதியிலிருந்து தனங்களப்பு வரையிலான பகுதியிலுள்ள மக்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேற அனுமதி வழங்கப்படாததால் நூற்றுக்கணக்கான குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் அங்கிருந்து வெளியேற முடியவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

தத்தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறிய மக்கள் கல்வயல், மட்டுவில் மத்தி, மட்டுவில் நுணாவில், கைதடி நுணாவில், நுணாவில் மேற்கு, நவற்குழி, கோயிலாக்கண்டி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் தங்கியுள்ளனர்

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் தங்கியுள்ள 111 குடும்பங்களைச் சேர்ந்த 575 பேருக்கு பிரதேச செயலகத்தினால் சமைத்த உணவுகள் வழங்கப்பட்டன. ஆஸ்பத்திரி வளவில் ஷெல் வீழ்ந்து வெடித்ததை அடுத்து இங்கிருந்த குடும்பங்களை மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயத்தில் தங்குமாறு பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை கேட்டுள்ளார்.

கூட்டுறவுச் சங்கக் கிளைக் கடைகளைத்திறந்து பொருள்களை விநியோகிக்குமாறும் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (உ-3-31-117)

## பொன்னாலை...

(முதலாம் பக்கத் தொடர்)

ஆனால் நேற்று முன்தினம் முதல் பக்தர்கள் ஆலயத்துக்குச் செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

ஆலய ஊழியர்கள் உபயகாரர்கள் என 15 பேர் மட்டும் நேற்று ஆலயத்துக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர் (உ-3-4)

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்)

இலச்சினை பொறிக்கப்பட்ட 'ஜாக் கெட்டுக்களை' அணிந்த தொண்டர்களை ஆஸ்பத்திரி சுற்றாடலில் பணிபுரிய வைப்பதென கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது

ஆஸ்பத்திரி வளவுக்குள் ஆயுதங்களுடன் எவரும் நடமாடுவதைத் தடை செய்வது என்றும் இந்தக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுளது. (உ-3


வீடியோ CD
வெளியீடு
பிரபுதேவா சிம்ரன்
டைம்
விஷ்ணு வீடியோ.
K.K.S. றோட்,
கோண்டாவில்,
(71812)


## கோரிக்கை

யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி கற்கை நெறியின் முதலாம் வருட மாணவர்கள் அனைவரையும் இன்று காலை 9 மணிக்கு விரிவுரை மண்டபத்துக்கு வருமாறு கற்கை நெறி இணைப்பாளர் கேட்டுள்ளார். (ஐ-6)

## விடுவிப்பு!

ஓயாத அலைகள் - 3 நடவடிக்கையின் போது சரணடைந்த மேலும் இரு சிப்பாய்களை விடுதலை செய்யப் போவதாகப் புலிகள் அறிவித்துள்ளனர்.

"புலிகளின் குரல்" வானொலி நேற்றைய தினம் இந்தத் தகவலை வெளியிட்ட போதிலும் எப்போது, எங்கே வைத்து அவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்ற தகவலை அது தெரிவிக்கவில்லை. (உ-7-164)

## நீதிவான்கள் இடமாற்றம்

யாழ்ப்பாணம், டிசெ 16

யாழ். மாவட்டத்தில் பணிபுரியும் இரு நீதிவான்கள் இன்று இடமாற்றம் பெறுகின்றனர்.

யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, மல்லாகம் ஆகிய நீதிமன்றங்களின் நீதிவானாக ஆர் ரி விக்னராஜாவும் —

பருத்தித்துறை நீதிவானாக எஸ் ஏ. ஈ. ஏகநாதனும் — இடமாற்றம் பெற்றுள்ளனர். (உ-3)

## காலமானார்

யாழ்ப்பாணம், டிசெ. 16

யாழ். மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் முன்னாள் கல்விப் பணிப்பாளரும் வடக்கு—கிழக்கு மாகாண பரீட்சை ஆணையாளருமான இரா. சுந்தரலிங்கத்தின் மனைவியார் தேவராணி (வயது 58) நேற்று மாலை கொழும்பில் காலமானார் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவிருக்கின்றன (உ-3)

## தாழையடியில்...

(முதலாம் பக்கத் தொடர்)

தடுக்கப்பட்டுள்ளனர் என்றும் —

அங்கிருந்து ஒருவாறு வெளியேறி வந்தவர்கள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

இந்தத் தகவல் பருத்தித்துறையில் உள்ள ஈ.பி.டி.பி அலுவலகத்தால் அந்த அமைப்பின் தலைமைப்பீடத்துக்குத் தெரியப்படுத்தப்பட்டதாகவும்—

வடபிராந்திய இராணுவ தலைமையக அதிகாரிகளுடன் கட்சித் தலைமைப் பீடம் தொடர்பு கொண்டுள்ளதாகவும் —

அந்தக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அகதிகள் விரும்பிய இடங்களுக்குச் செல்ல அனுமதி பெற்றுக்கொடுப்பது குறித்து உயர்மட்ட அதிகாரிகளுடன் யாழ் ஆயர் இல்லமும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவும் தொடர்பு கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

(உ-3-5-6-7-118-173)

## சாவகச்சேரி...

(முதலாம் பக்கத் தொடர்)

தினம் மாலையில் கச்சாய், அல்லாரை முகாம் பகுதிகளில் இடம்பெற்ற துப்பாக்கிச் சண்டைகளில் சிக்கிகாயமடைந்த விஜயரத்தினம் செல்வராணி (வயது 39) என்ற பெண் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதற்கிடையில்—

சாவகச்சேரி ஆஸ்பத்திரியின் பாவனையில இருந்த அம்புலன்ஸ் படையினரின் பாவிப்புக்கு எடுக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

தனங்களப்புப் பகுதியில் வீழ்ந்து வெடித்த ஷெல்களினால் காயமடைந்த கோபால சிதம்பரப்பிள்ளை (வயது 60) என்பவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சிறு காயமடைந்த தமது மனைவியான லட்சுமிப்பிள்ளை (வயது 55) என்பவரை தம்முடன் வைத்தியசாலைக்குக் கூட்டிவர தமக்கு அனுமதி வழங்கப்படவில்லை என்று அவர் தெரிவித்தார்.

அவரது மனைவியை வைத்தியசாலைக்குகூட்டி வரசெஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் உதவி கோரப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

கோப்பாய் பிரதேசத்தில் இருந்து தென்மராட்சி கரையோரப் பகுதிகளை நோக்கி நேற்று அதிகாலையில் ஷெல்கள் ஏவப்பட்டபோது ஏற்பட்ட வெடிப் பொலிகளினால் யாழ். நகர் அதிர்ந்த வண்ணம் இருந்தது.

(உ-3-5-31-117-15-139-173-133)

## சாவகச்சேரியில்...

(முதலாம் பக்கத் தொடர்)

சாவகச்சேரி தபால் நிலையம் நேற்று மூன்றாவது நாளாகவும் மூடப்பட்டுக் காணப்பட்டது.

நகரப்பகுதியில் உள்ள தனியார் தொலைத் தொடர்பு நிலையங்கள் சில மூடப்பட்டுள்ளதாலும், சில தொலைபேசிகள் செயற்படாததாலும் பொதுமக்கள் உறவினர்களுடன் தொலைபேசிமூலம் உரையாடுவதற்காக தொலைத்தொடர்பு நிலையங்களில் முண்டியடித்ததைக் காணமுடிந்தது. (உ-7-117)

## தொண்டர்...

(முதலாம் பக்கத் தொடர்)

மனம் வழங்கவேண்டும் என்று கோரியும் —

யாழ்ப்பாணம், கல்முனை ஆகிய மாவட்டங்களில் உள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கும் அதே நேரத்தில் ஏனைய மாவட்டத்திலும் நியமனம் வழங்க வேண்டும் என்று கோரியும்—

இந்தப் போராட்டத்தை நடத்தினர்.

தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் த. மகாசிவம் தலைமையிலான குழு ஒன்று ஆளுநர், செயலாளர் ஆகியோருடன்பேச்சு நடத்தியது

ஏனைய மாவட்டத்தில் உள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்க ஆளுநர் கொள்கை அளவில் இணக்கம் தெரிவித்தபோதும் உடனடியாக நியமனம் வழங்க இயலாது என்று கூறியுள்ளார்.

ஈ பி டி. பி அமைப்பின் திருமலை மாவட்டப் பொறுப்பாளர் போராட்டக்காரரைச் சந்தித்துத் தமது தலைமையுடன் பேசி நாளைக்குள் முடிவு அறிவிப்பதாக உறுதி கூறியதாகத் தெரியவந்தது. (உ-3-150)

## வெற்றிலைக்கேணி...

(முதலாம் பக்கத் தொடர்)

இருந்து படைகள் சற்றுப் பின் வாங்கியுள்ளபோதிலும் அதே பிரதேசத்தில் எமது நிலைகள் தொடர்ந்தும் உள்ளன.

இந்தச் சண்டையில் 11 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை 28 படையினர் உயிரிழந்துள்ளனர்; 340 படையினர் காயம் அடைந்துள்ளனர். அவர்களில் 65 சதவீத மானவர்கள் சிறுகாயங்களுக்குள்ளானவர்கள் என்பதால் அவர்கள் மீண்டும் பணியில் இணைந்துவிட்டனர்.

விடுதலைப் புலிகள் தரப்பில் 480 பேர் உயிரிழந்துள்ளனர் 112 பேர் உயிரிழந்ததை அவர்கள் ஊர்ஜிதம் செய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் தேர்தலைக் குழப்பும் நோக்குடன் இந்தத் தாக்குதலைப் புலிகள் ஆரம்பித்துள்ளனர்.

பூநகரியில் இருந்து சாவகச்சேரி நோக்கிப் புலிகள் ஷெல் தாக்குதல் நடத்தி வருகின்றனர். அவை படை நிலைகள் அருகிலும் பொது மக்கள் நிலைகளுக்கு அருகிலும் விழுகின்றன—என்றார். (உ-3)

## கள்ள...

(முதலாம் பக்கத் தொடர்)

கம் வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம் போன்றவற்றின் பிரதிநிதிகளை மேற்படி நிலைய அதிகாரிகள் சந்தித்து நடத்திய கலந்துரையாடலிலே இவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வாக்களிப்பு நிலைய முகவர்கள் இல்லாமையினால் வாக்களிப்பின் போது வாக்களிப்பு நிலையங்கள் அனைத்தும் தீவிரமாகக் கண்காணிக்கப்பட வேண்டும் என்றும் இக்கலந்துரையாடலில் வலியுறுத்தப்பட்டது. (உ-5)


எமது புதிய
வீடியோ CD
வெளியீடுகள்
பிரபுதேவா, சிம்ரான்
நடித்த
டைம்
சத்தியராஜ் ரோஜா
நடித்த
அழகர் சாமி
(Copy)
சுப்பஸோ வீடியோ
149, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/10219)



31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
வீட்டுக்கிருத்தியசபிண்டீகரண அழைப்பும்
நன்றி நவிலலும்

திருமதி
செல்லம்மா சண்முகம்
தோற்றம்: 12-04-1917 மறைவு: 17-11-1999

கடந்த 17-11-99 இல் சிவபதமெய்திய
எமது குடும்பத் தலைவி
திருமதி செல்லம்மா சண்முகம்

அவர்களின் சபிண்டீகரணக் கிரியைகள் வெள்ளிக்கிழமை (17-12-99) எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதரராக வருகை தந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மற்றும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

ச. விநாயகமூர்த்தி
(ஆசிரியர், யா/ உடுப்பிட்டி அ.மி. த.க.க.)

இலகடி,
அல்வாய் கிழக்கு. (சி/10218)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது [illegible] 16-12-1999 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org